# மெய்யான மருத்துவ மிஷனரி!

**சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க...**
**இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும்,**
**சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்,**
**கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்,**
**கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும்,...**
**துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும்,...**

# 1

# நமது உதாரணம்!

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, மனிதனுடைய தேவைகளுக்கான சோர்ந்துபோகாத ஊழியக்காரராக இந்த உலகத்திற்கு வந்தார். மனுக்குலத்தின் ஒவ்வொரு தேவைக்கும் ஊழியம் செய்வதற்கேதுவாக, "அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்"—மத்தேயு 8:17. வியாதி, நிர்பாக்கிய நிலை மற்றும் பாவத்தின் பாரத்தை அகற்றும்படியாக அவர் வந்தார். மனிதனுக்கு முழுமையான மீட்பைக் கொண்டுவருவதுவே அவரது ஊழியமாக இருந்தது. ஆரோக்கியத்தையும் சமாதானத்தையும் பரிபூரண குணத்தையும் அவர்களுக்கு அருளும்படியாக அவர் வந்தார். {MH 17.1}

அவருடைய உதவியைத் தேடினவரின் சூழ்நிலைகளும் தேவைகளும் வேறுபட்டிருந்தன. எனினும் அவரிடம் வந்த எவரும் உதவிபெறாமல் திரும்பிச் செல்லவில்லை. சுகமளிக்கும் வல்லமையின் ஓடை அவரிடமிருந்து பாய்ந்துவர, மனிதர் சரீரத்திலும் மனதிலும் ஆத்துமாவிலும் முழுமையடைந்தனர். {MH 17.2}

இரட்சகரின் ஊழியம் இடத்தாலோ காலத்தாலோ கட்டுப் படுத்தப்படவில்லை. அவருடைய இரக்கங்கள் முடிவற்றதாயிருந்தன. அவர் தமது சுகப்படுத்திப் போதிக்கும் ஊழியத்தை மிகப்பெரிய அளவில் செய்திருந்ததால், அதைப் பெற்றுக்கொள்ளக் கூடிவந்த திரளானோரை பாலஸ்தீனத்திலிருந்த எந்தவொரு கட்டிடமும் கொள்ளக்கூடாதிருந்தது. கலிலேயாவின் வசதியான மலைச்சரிவுகளிலும், அவர் பயணித்த பாதையோரங்களிலும், கடற்கரையிலும், ஜெபஆலயங்களிலும் — எங்கெல்லாம் வியாதியஸ்தரைக் கொண்டுவர முடிந்ததோ,

அங்கெல்லாம் அவருடைய மருத்துவமனை காணப்பட்டிருந்தது. கடந்துசென்ற ஒவ்வொரு பட்டணத்திலும் ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும், பாதிக்கப்பட்டவர்கள்மீது அவர் தமது கைகளை வைத்து சுகப்படுத்தினார். தமது செய்தியைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்த இருதயங்களையெல்லாம், அவர்களது பரலோகத் தகப்பனின் அன்பைக்குறித்த நிச்சயத்தினால் அவர் ஆறுதல் படுத்தினார். தம்மிடம் வந்தவர்களுக்கு நாள்முழுவதும் அவர் ஊழியம் செய்தார். தங்கள் குடும்பங்களுக்கு ஆதரவளிக்க பகல்முழுவதும் உழைக்கவேண்டியதாயிருந்தவர்களுக்கு மாலையில் அவர் கவனம் செலுத்தினார். {MH 17.3}

மனிதரின் இரட்சிப்பிற்கான - அச்சுறுத்தும் பாரமான பொறுப்பை இயேசு சுமந்தார். மனித இனத்தின் கொள்கைகளிலும் நோக்கங்களிலும் தீர்மானமான மாற்றம் வராவிடில், அனைத்தும் நஷ்டமடையும் என்பதை அவர் அறிந்தார். இதுவே அவருடைய ஆத்தும பாரமாயிருந்தது; அவர்மேலிருந்த அந்த பாரத்தை எவராலும் உணர்ந்துகொள்ளமுடியவில்லை. குழந்தைப்பருவத்திலும் வாலிபத்திலும் மனிதப்பருவத்திலும் அவர் தனியாகவே வாழ்ந்தார். எனினும் அவரது சமூகத்தில் இருப்பது பரலோகத்தில் இருப்பதைப்போல இருந்தது. ஒவ்வொரு நாளும் சோதனைகளையும் போராட்டங்களையும் அவர் சந்தித்தார். ஒவ்வொரு நாளும் தீமையைச் சந்தித்து, தாம் ஆசீர்வதித்து காப்பாற்ற வந்தவர்கள்மேலிருந்த அதன் வல்லமையையும் அவர் கண்டிருந்தார். எனினும் அவர் தோல்வியடையவோ சோர்ந்துபோகவோ இல்லை. {MH 18.1}

அனைத்துக் காரியத்திலும், தம் விருப்பங்களை தமது ஊழியத்திற்கு இசைவாக கண்டிப்புடன் நிறுத்தினார். ஒவ்வொரு காரியத்தையும் தமது பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி, வாழ்க்கையை மகிமைப்படுத்தினார். அவரது இளமைப்பருவத்தில் ரபிமார்களின் பள்ளியில் அவரைக் கண்ட அவருடைய தாய்: "மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்?" என்று கேட்டபோது அவர்: "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா"

(லூக்கா 2:48,49) என்று பதிலளித்தார். அவருடைய இந்த பதிலே அவரது வாழ்க்கைப் பணியின் அடிப்படைக் கருத்தாக இருந்தது. {MH 19.1}

அவரது வாழ்க்கை தொடர் தற்தியாகமாக இருந்தது. ஒரு வழிப்போக்கனென்று அவருடைய நண்பர்கள் அவருக்கு ஏற்பாடு செய்திருந்த தயவைத்தவிர வேறு இல்லம் அவருக்கு இந்த உலகத்தில் இல்லாதிருந்தது. நமக்காக மிகவும் ஏழ்மையான வாழ்க்கை வாழ்ந்து, தேவையிலும் துன்பத்திலும் இருப்பவர் நடுவே நடந்து பிழைக்க அவர் வந்தார். தாம் யாருக்காக அவ்வளவு செய்திருந்தாரோ அவர்கள் நடுவே அங்கீகரிக்கப்படாதவராக, கனமற்றவராக அவர் வாழ்ந்து வந்தார். {MH 19.2}

அவர் எப்போதும் பொறுமையும் மகிழ்ச்சியுமுள்ளவராக இருந்ததால், துன்பப்பட்டவர்கள் அவரைச் சமாதானத்தின் தூதுவரென்று பாராட்டினார்கள். ஆண்கள் பெண்கள், குழந்தைகள் வாலிபர் - அனைவரின் தேவைகளையும் அவர் கண்டிருந்து, அனைவருக்கும் "என்னிடம் வாருங்கள்" என்ற அழைப்பைக் கொடுத்தார். {MH 19.3}

தமது ஊழியத்தில் போதிப்பதைக்காட்டிலும் வியாதியஸ்தரைக் குணப்படுத்துவதற்கு இயேசு அதிக நேரம் அர்ப்பணித்திருந்தார். "அழிப்பதற்கு அல்ல இரட்சிப்பதற்கே வந்தேன்" என்கிற அவருடைய வார்த்தையின் சத்தியத்திற்கு அவரது அற்புதங்கள் சாட்சிபகர்ந்தன. அவர் சென்றவிடத்திற்கெல்லாம் அவருடைய இரக்கத்தின் நற்செய்தி முன்சென்றது. அவர் கடந்துசென்றிருந்த இடங்களிலெல்லாம் அவருடைய இரக்கத்தைப் பெற்றவர்கள் ஆரோக்கியத்தில் மகிழ்ந்து புதிதாகப் பெற்ற வல்லமைகளை அனுபவித்திருந்தனர். அவர்களுக்காக ஆண்டவர் செய்த கிரியைகளை அவர்கள் உதடுகளிலிருந்து கேட்கும்படி, மக்கள் கூட்டங்கள் அவர்களைச் சூழ்ந்திருந்தன. **அநேகர் கேட்ட முதல் சத்தம் அவருடைய சத்தமாயிருந்தது; அநேகர் பேசிய முதல் வார்த்தை அவருடைய பெயராயிருந்தது; அநேகர் கண்டிருந்த முதல் முகம் அவருடைய முகமாயிருந்தது. இப்படியிருக்க, எவ்விதம் அவர்களால் இயேசுவை நேசியாமலும் அவருடைய துதியை அறிவியாமலும் இருக்கமுடியும்? அவர்களுடைய பட்டணங்கள் மற்றும் நகரங்கள்**

**வழியாக கடந்துசென்றபோது, அவர் ஜீவனையும் மகிழ்ச்சியையும் பரப்புகிற ஒரு உயிரோடையாக இருந்தார்.** {MH 19.4}

> "கடற்கரையருகிலும் யோர்தானுக்கு அப்புறத்திலுமுள்ள செபுலோன் நாடும் நப்தலி நாடும் ஆகிய புறஜாதியாருடைய கலிலேயாவிலே, இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது" —மத்தேயு **4:14,15.** {MH 20.1}

சுகமளித்த ஒவ்வொரு சமயத்தையும் நமது இரட்சகர் தெய்வீக கொள்கைகளை மனதிலும் ஆத்துமாவிலும் பதிக்கும் சந்தர்ப்பமாக்கினார். இதுவே அவருடைய ஊழியத்தின் நோக்கமாக இருந்தது. தமது கிருபையின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள மனிதரின் இதயங்களைக் கொண்டுவரும்படியாக அவர் உலக ஆசீர்வாதங்களைக் கொடுத்தார். {MH 20.2}

யூத தேசத்தின் ஆசிரியர்களுக்கு மத்தியிலே மிக உயர்வான ஒரு இடத்தை கிறிஸ்து பெற்றிருக்கலாம். ஆனால் ஏழைகளுக்கு சுவிசேஷத்தினை எடுத்துச்செல்வதை அவர் விரும்பித் தெரிந்தெடுத்தார். பெரும் வீதிகளிலும் சந்துகளிலும் இருந்தவர்கள் சத்தியத்தின் வார்த்தைகளைக் கேட்பதற்கேதுவாக அவர் இடம்விட்டு இடம் சென்றார். கடற்கரையருகிலும் மலைப்பகுதியிலும், பட்டணத்தின் தெருக்களிலும் ஆலயத்திலும் வேதவாக்கியங்களை விளக்கும் அவர் குரல் தொனித்தது. புறஜாதிகள் அவருடைய வார்த்தைகளைக் கேட்கும்படியாக, பலவேளைகளில் ஆலயத்தின் வெளிப்பிராகாரங்களில் அவர் போதித்தார். {MH 20.3}

வேதபாரகரும் பரிசேயரும் வேதவாக்கியங்களுக்குக் கொடுத்த விளக்கங்களிலிருந்து கிறிஸ்துவின் போதனைகள் வேறுபட்டு இருந்ததினால் மக்களின் கவனம் கவரப்பட்டது. ரபிமார்கள் பாரம்பரியங்களையும், மனிதக்கோட்பாடுகளையும் யூகங்களையுங் குறித்துப் போதித்திருந்தார்கள். பலவேளைகளில் வேதவாக்கியங்களைக் குறித்து மனிதர் போதித்து எழுதியிருந்தவைகள், வேதவாக்கியங்களின்

இடத்தையே எடுத்திருந்தன. கிறிஸ்து போதித்தவைகளின் பொருள் தேவனுடைய வார்த்தை மாத்திரமே. தம்மைக் கேள்விகேட்டவர்களை: **"என்று எழுதியிருக்கிறதே," "வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது?" "எவ்விதம் வாசிக்கிறாய்?"** என்கிற நேரடி வார்த்தைகளால் அவர் சந்தித்தார். நண்பனாலோ அல்லது சத்துருவினாலோ ஒரு ஆர்வம் எழுப்பப்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர் வேதவார்த்தைகளைக் கொடுத்தார். தெளிவோடும் வல்லமையோடும் சுவிசேஷச்செய்தியை அறிவித்தார். முற்பிதாக்கள் தீர்க்கதரிசிகளுடைய போதனைகள்மேல் அவருடைய வார்த்தைகள் அதிக வெளிச்சம் வீசியதால் வேதவாக்கியங்கள் மனிதருக்கு ஒரு புதிய வெளிப்பாடாக வந்தன. அவரைக் கேட்டிருந்தவர்கள் வேதாகமத்தில் அவ்வளவு ஆழமான பொருளை இதற்குமுன் ஒருபோதும் உணர்ந்திருக்கவில்லை. {MH 21.1}

கிறிஸ்துவைப்போன்ற ஒரு நற்செய்தியாளர் ஒருபோதும் இருந்ததில்லை. அவர் பரலோகத்தின் மகத்துவமானவர்; எனினும் மனிதர் இருக்குமிடத்தில் அவர்களைச் சந்திக்கும்படி, நமது இயல்பை எடுத்துக்கொள்ளத் தம்மைத் தாழ்த்தினார். உடன்படிக்கையின் தூதரான கிறிஸ்து, ஐசுவரியவான்கள் ஏழைகள், சுயாதீனர் அடிமைகள் அனைவருக்கும் இரட்சிப்பின் செய்திகளைக் கொண்டுவந்தார். மாபெரும் சுகமளிப்பவர் என்று அவருடைய புகழ் பாலஸ்தீனம் முழுவதும் பரவியது. அவருடைய உதவியைப் பெறுவதற்காக அவர் கடக்கப்போகிற வழிகளுக்கு வியாதியஸ்தர் வந்தனர். அந்த இடங்களிலுங்கூட அவருடைய வார்த்தைகளைக் கேட்கவும், அவரால் தொடப்படவும் அநேகர் ஆவலோடு இருந்தனர். சுவிசேஷத்தைப் போதித்தவராகவும், வியாதியஸ்தரை சுகப்படுத்தினவராகவும்—மகிமையின் இராஜா மனுஷீகத்தின் தாழ்மையான ஆடையில்—பட்டணத்திலிருந்து பட்டணத்திற்கும், நகரத்திலிருந்து நகரத்திற்கும் போனார். {MH 22.1}

அவர் தேசத்தின் மாபெரும் வருடாந்திரப் பண்டிகைகளில் கலந்து கொண்டார். வெளித்தோற்றமான சடங்குகளில் மூழ்கியிருந்த திரளானோரிடம் பரலோகக் காரியங்களைக்குறித்து பேசி, நித்தியத்தை அவர்கள் பார்வைக்குள் கொண்டுவந்தார். ஞானத்தின் பொக்கிஷ

அறையிலிருந்து அனைவருக்கும் அவர் பொக்கிஷங்களைக் கொண்டுவந்தார். புரியவில்லை என்று எவரும் கூறமுடியாத எளிமையான வார்த்தைகளால் அவர்களோடு பேசினார். அவருக்கே உரிய வழிமுறைகளால் துக்கத்திலும் மனவேதனையிலுமிருந்த அனைவருக்கும் உதவினார். பாவத்தால் நோயுற்றிருந்த ஆத்துமாவிற்கு இளகிய உபசரிப்பான கிருபையோடு சுகத்தையும் பலத்தையும் கொண்டுவந்தவராக அவர் உழைத்தார். {MH 22.2}

ஆசிரியர்களின் பிரபுவான அவர், மக்களுக்கு மிகவும் பழக்கப்பட்ட தோழமைகளின்வழியாக அவர்களை அணுக வழிதேடினார். கேட்பவர்கள் தங்களுக்கு மிகவும் நெருக்கமும் புனிதமுமான நினைவுகளோடும் உணர்வுகளோடும் கேட்டவைகளை அதற்குப்பின்பு எப்போதும் பிணைத்துப் பார்க்கும்விதமாக அவர் சத்தியத்தைப் போதித்தார். அவர்களுடைய விருப்பங்களிலும் மகிழ்ச்சியிலும் தம்முடைய முழுமையான ஈடுபாட்டை அவர்கள் உணரும்விதமாக அவர் போதித்தார். அவருடைய போதனைகள் மிக நேரடியானதும், அவருடைய விளக்கங்களெல்லாம் மிகவும் பொருந்தக் கூடியதும், அவருடைய வார்த்தைகள் மிகவும் கிருபைமிக்கதும் மகிழ்ச்சியூட்டுவதுமாயிருக்க, அவரைக் கேட்டவர்கள் கவரப்பட்டனர். தேவையிலிருப்போரிடம் அவர் பேசின வார்த்தைகளின் எளிமையும் ஊக்கமும், ஒவ்வொரு வார்த்தையையும் பரிசுத்தப்படுத்தினது. {MH 23.1}

எப்படிப்பட்ட ஒய்வில்லாத வாழ்க்கையை அவர் வாழ்ந்தார்! தேவையிலும் துக்கத்திலும் இருப்பவர்களின் தாழ்மையான இல்லங்களில் நுழைந்து, வருத்தத்தில் இருப்பவருக்கு நம்பிக்கையையும் துயரத்திலிருப்பவருக்கு சமாதானத்தையும் போதிப்பவராக நாளுக்கு நாள் அவர் காணப்பட்டிருப்பார்! கிருபையும், இளகிய மனமும், உருக்கமும் உள்ளவராக, வாழ்க்கையில் தாழ்ந்திருந்தோரை உயர்த்துகிற வராகவும், துன்பப்படுவோரை ஆறுதல்படுத்துகிறவராகவும் சென்றார். எங்கு சென்றாலும் ஆசீர்வாதத்தைச் சுமந்துசென்றார். {MH 24.1}

ஏழைகளுக்கு ஊழியம் செய்தபோதிலும் ஐசுவரியவான்களைச் சென்றடையும் வழிகளை அவர் ஆராய்ந்தார். நாகரீகமான ஐசுவரிய

பரிசேயன், யூதப் பிரபு மற்றும் ரோம அதிகாரியின் அறிமுகத்தை அவர் நாடினார். அவர்களுடைய இருதயங்களைச் சென்றடைந்து, அழியக்கூடாத ஐசுவரியத்தை அவர்களுக்கு வெளிக்காட்டும்படியாக அவர்கள் வரவேற்புகளை ஏற்று, அவர்கள் விருந்துகளில் பங்குபெற்று, அவர்களுடைய விருப்பங்களிலும் வேலைகளிலும் தம்மைப் பழக்கப்படுத்தினார். {MH 24.2}

உன்னதத்திலிருந்து வல்லமையைப் பெற்றுக்கொள்வதினால் மனிதன் கறையற்ற வாழ்க்கை வாழமுடியும் என்பதைக் காண்பிக்க கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். சோர்ந்துபோகாத பொறுமையோடும் இரக்கமான உதவிகளோடும் மனிதரை அவர்களின் தேவைகளில் அவர் சந்தித்தார். தமது கிருபையின் மென்மையான தொடுதலின்வழியாக அவர்களுடைய வெறுப்பை அன்பாகவும் அவிசுவாசத்தை நம்பிக்கையாகவும் மாற்றி, ஆத்துமாவிலிருந்த அமைதியின்மையையும் சந்தேகத்தையும் விரட்டினார். {MH 25.1}

சொல்ல விரும்பினவர்களிடமெல்லாம்: "என்னை பின்பற்றிவா" என்று அவரால் சொல்லமுடிந்தது. அதைக் கேட்டவன் எழுந்து அவருக்குப் பின்சென்றான். உலகக் கவர்ச்சியின் சாபம் உடைக்கப்பட்டது. அவருடைய குரலோசையால் இருதயத்திலிருந்து பேராசை மற்றும் இலட்சிய ஆவி ஓடிப்போக, விடுதலைபெற்றவர்களாக எழுந்து அவர்கள் இரட்சகருக்குப் பின்சென்றனர். {MH 25.2}

## சகோதர அன்பு

நாடு, அந்தஸ்து, சமயம்போன்ற எந்தவொரு வேறுபாட்டையும் கிறிஸ்து அங்கீகரிக்கவில்லை. வேதபாரகரும் பரிசேயரும் பரலோக ஈவுகளை தங்களுக்கும் தங்கள் நாட்டின் நன்மைக்கும் மாத்திரம் வைத்து, உலகத்திலிருக்கும் தேவ குடும்பத்தின் மற்ற மக்களை தவிர்க்க எண்ணியிருந்தனர். ஆனால் பிரிவினையின் ஒவ்வொரு சுவரையும் தகர்க்கும்படி கிறிஸ்து வந்தார். தமது கிருபை மற்றும் அன்பின் ஈவு, காற்றைப்போலவும், வெளிச்சத்தைப்போலவும், பூமியை புதுப்பிக்கிற மழையைப்போலவும் எல்லைக்குட்படாதது என்று காண்பிக்க வந்தார். {MH 25.3}

யூதரும் புறஜாதியினரும், அடிமையும் சுயாதீனரும் பொதுவான சகோதரத்துவத்தில் இணைக்கப்பட்டு, தேவனுக்கு முன்பாகச் சமமாயிருக்கிற சாதியில்லாத ஒரு மார்க்கத்தை கிறிஸ்துவின் வாழ்க்கை ஸ்தாபித்தது. கொள்கையின் எந்த கேள்வியும் அவருடைய நடக்கையைப் பாதிக்கவில்லை. அயலகத்தாருக்கும் அந்நியனுக்குமிடையே, நண்பனுக்கும் சத்துருவிற்குமிடையே அவர் எந்த வேறுபாட்டையும் காண்பிக்கவில்லை. ஜீவத்தண்ணீருக்காக தாகத்தோடிருக்கும் ஆத்துமா மாத்திரமே அவருடைய இருதயத்தைக் கவர்ந்தது. {MH 25.4}

மதிப்பற்றவனென்று எந்த மனிதனையும் கடந்துசெல்லாமல், ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் குணமளிக்கும் தீர்வைக் கொடுக்க அவர் நாடினார். எந்தக் கூட்டத்தில் இருந்தாலும் அந்தச் சூழ்நிலைக்கும் நேரத்திற்கும் பொருத்தமான ஒரு பாடத்தை அவர் கொடுத்தார். மனிதர் சகமனிதரை புறக்கணித்து அவமானப்படுத்திய செயல் ஒவ்வொன்றும், அவர்களுக்கு தமது தெய்வீக—மனுஷீக இரக்கம் எவ்வளவு அவசியம் என்பதை அவருக்கு அதிகமாக உணர்த்தியது. கரடுமுரடாகவும், எதிர்கால நம்பிக்கையின்றியும் இருப்பவர்கள்முன், அவர்கள் குற்றமற்ற தீங்கில்லாதவர்களாக மாறமுடியும் என்கிற நிச்சயத்தை வைத்து, அவர்களை நம்பிக்கையினால் ஏவ அவர் வகைதேடினார். அப்படிப்பட்ட குணத்தை அடைவது அவர்களை தேவனுடைய பிள்ளைகளென்று காண்பிக்கும். {MH 25.5}

சாத்தானுடைய கட்டுப்பாட்டிற்குள் சறுக்கினவர்களையும், அவனுடைய கண்ணியை உடைக்க பலமில்லாதிருந்தவர்களையும் பலவேளைகளில் அவர் சந்தித்தார். அப்படிப்பட்ட சோர்ந்துபோய், வியாதிப்பட்டு, சோதிக்கப்பட்டு, விழுந்துபோனவருக்கு, இயேசு பரிவான மென்மையான வார்த்தைகளையும் புரிந்துகொள்ளக்கூடிய அவசியமான வார்த்தைகளையும் பேசினார். ஆத்துமாக்களின் சத்துருவோடு நேரடியாகப் போராடிக்கொண்டிருந்த மற்றவர்களையும் அவர் சந்தித்தார். தேவதூதர்கள் அவர்கள் பக்கத்திலிருந்து உதவுவதால், வெற்றிபெறுவார்கள் என்கிற நிச்சயத்தைக் கொடுத்து, உறுதியாக போராடும்படி அவர்களை உற்சாகப்படுத்தினார். {MH 26.1}

தமது அனுதாபத்தினாலும் மனிதரிடம் காண்பித்த தயவினாலும் மனுக்குலத்தின் கண்ணியத்தை அங்கீகரித்திருப்பதாகக் காண்பித்து, ஆயக்காரரின் மேசையில் கனமுள்ள விருந்தினராக அமர்ந்தார். அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாவதற்கு மனிதர் ஏங்கினர். தாகமுள்ள இருதயங்களில் அவருடைய வார்த்தைகள் ஆசீர்வாதமான ஜீவனை அளிக்கும் வல்லமையாக விழுந்தன. புது உந்துதல்கள் எழும்ப, சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்ட அவர்களுக்கு புதிய வாழ்க்கையின் சாத்தியங்கள் திறந்தன. {MH 26.2}

யூதனாயிருந்தபோதும், இயேசு சமாரியரோடு தடையின்றி கலந்து, தமது நாட்டின் பரிசேயப் பழக்கவழக்கங்களை உடைத்தார். அவர்களுடைய தப்பெண்ணங்களுக்குமுன் இழிவாகக் கருதப்பட்ட மக்களின் உபசரிப்பை அவர் ஏற்றுக்கொண்டார். அவர்களுடைய கூடாரங்களில் அவர்களோடு தூங்கி, அவர்களுடைய மேசையில் புசித்து—அவர்கள் கைகளால் சமைக்கப்பட்டு பரிமாறப்பட்ட உணவை உண்டு—அவர்களுடைய வீதிகளில் போதித்து, அவர்களை மிக உயர்ந்த தயவோடும் மரியாதையோடும் நடத்தினார். மனித அனுதாபம் என்கிற கட்டு ஒருபுறம் அவர்களுடைய இருதயங்களை இழுக்க, அவருடைய தெய்வீகக் கிருபை யூதர்கள் நிராகரித்த இரட்சிப்பை மறுபுறம் அவர்களுக்குக் கொண்டுவந்தது. {MH 26.3}

## தனிப்பட்ட ஊழியம்

இரட்சிப்பின் சுவிசேஷத்தை அறிவிக்கும் ஒரு சந்தர்ப்பத்தைக்கூட கிறிஸ்து நெகிழவில்லை. சமாரியாவின் அந்த ஒரு பெண்ணிற்கு அவர் கொடுத்த வார்த்தைகளைக் கவனியுங்கள். அந்தப் பெண் தண்ணீர் மொண்டுகொள்ள வந்தபோது அவர் யாக்கோபின் கிணற்றருகே அமர்ந்திருந்தார். அவள் ஆச்சரியப்படும்விதமாக: "தாகத்துக்குத்தா" என்று அவளிடம் உதவிகேட்டார். அந்தக் குளிர்ந்த தண்ணீரை விரும்பினதோடு, அவளுக்கு ஜீவத்தண்ணீரை கொடுப்பதற்கான பாதையைத் திறக்கவும் அவர் விரும்பியிருந்தார். "யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா

*என்று எப்படிக் கேட்கலாம்" என்று அந்த ஸ்திரீ சொல்ல, "நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார்.... இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக்கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்" என்று இயேசு பதிலளித்தார் (யோவான் 4:7–14).* {MH 27.1}

*இந்த ஒரு பெண்ணிடம் எவ்வளவு ஆர்வத்தை கிறிஸ்து வெளிக்காட்டினார்! அவருடைய வார்த்தைகள் எவ்வளவு உண்மையும் திறனும் மிக்கதாக இருந்தது. அந்தப் பெண் அதைக் கேட்டபோது தன்னுடைய தண்ணீர் குடத்தை அங்கேயே வைத்தவளாக பட்டணத்திற்குள் ஓடி, தன் நண்பர்களிடம்: "நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ" என்றாள். "சமாரியரில் அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள்" (வசனம் 29,39) என்று நாம் வாசிக்கிறோம். அன்றிலிருந்து இந்நாள்வரை கடந்துசென்ற வருடங்களில் ஆத்துமாக்களை இரட்சிக்கும்படி இந்த வார்த்தைகள் செலுத்திய செல்வாக்கை யார்தான் மதிப்பிடக்கூடும்?* {MH 28.1}

*சத்தியத்தைப் பெற்றுக்கொள்ள எங்கெல்லாம் இருதயங்கள் திறந்திருந்ததோ, அங்கெல்லாம் அவர்களுக்குப் போதிக்க கிறிஸ்து ஆயத்தமாயிருக்கிறார். பிதாவையும், இருதயங்களை வாசிக்கிறவர் ஏற்றுக் கொள்ளக்கூடிய சேவையையும் அவர் அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். அப்படிப்பட்டவர்களிடம் அவர் உவமானங்களை உபயோகிப்பதில்லை. கிணற்றருகே இருந்த பெண்ணிடம் பேசியதைப்போல, "உன்னுடனே பேசுகிற நானே அவர்" என்று கூறுகிறார்.* {MH 28.2} ★